சிந்தியாகு ஜீவியசரித்திரம்

Q6wM48
N.27

85940

A. M. D. G.

# சேசுசபை சங்கைக்குரிய
# சந்தியாகப்பர் சுவாமியவர்களின்
# ஜீவிய சரித்திரம்.

Printed by Rev. Br. Joseph, S.J.,
Superintendent. St. Joseph's Industrial School Press,
Trichinopoly.

1927.

PERMISSU SUPERIORUM.

Imprimatur:

✠ A. FAISANDIER, S. J.,

*Bishop of Trichinopoly.*

85940

### சேசுசபை சங்கைக்குரிய

# சந்தியாகப்பர் சுவாமியவர்களின்

# ஜீவிய சரித்திரம்.

1926-ம் ௵ ஜனவரி-௴ 22-௳ திருச்சிராப்பள்ளி மேற்றிராணியார் ஆண்டவரவர்கள் வசிக்கும் பங்களாவின் ஓர் சிற்றறையில், மிக வந். ஆண்டவரவர்களும், சேசுசபை சுவாமிமார் பலரும் சூழ்ந்து நிற்க, வெகு அமைதியாய் பரலோக பிராப்தியானார் எழுபத்தெட்டாம் பிராயம் நிறைந்த சங்கைக்குரிய வயோதிகர் **சேசுசபை சந்தியாகப்பர் சுவாமியவர்கள்.** சந்தியாகப்பர் சுவாமி என்றால்,—இவருடைய தூய்மையும் வாய்மையும், தெய்வ பக்தியும், வித்தியாத்திறமையும் இத்தமிழ்நாட்டில் அறியாதார் யாவர்? அமிர்தம் பொழிந்தாற்போல், இவர் மொழிந்த பிரசங்கங்களைக் கேட்டோர் தங்கள் வாழ்நாளெல்லாம் அவைகளின் இனிய சொற்சுவையை மறவார்! இவர் இயற்றித்தந்த செந்தமிழ் நூல்கள் சில தமிழ் மக்களுக்கு எக்காலமும் சிறந்ததோர் பிதிரார்ஜிதமாம்!

**பாலியப் பிராயம்.**

சங். சந்தியாகப்பர் சுவாமியவர்கள் பிறந்தது 1848-ம் ௵, ஜனவரி-௴ 5-௳. அவர் பிறந்த ஊர் மதுரை ஜில்லா, மான மதுரைக்குச் சமீபத்திலிருக்கும் **பசலை** என்ற சிற்றூர். வேளாளர் குலத்தவரான இவருடைய பந்து ஜனங்கள் இன்னும் அவ்வூரில் வசித்து வருகின்றனர். பிறந்த மூன்றும் மாதம்—மார்ச்சு-௴ 5-ம் ௳,—அக்காலம் இடைக்காட்டூர், இராஜகம்பீரம் முதலிய இடங்களுக்கு விசாரணைக் குருவாயிருந்த சேசுசபை சங். ஹர்லின் (J. Hurlin) சுவாமியவர்களால் குழந்தைக்கு ஞான

தீட்சை கொடுக்கப்பட்டது. சொந்த ஊர் பசலை என்றாலும், சிசு முதல் இவர் வளர்ந்து வந்தது பெரும்பாலும் மதுரையிலேயே. ஆனால் வருஷந்தோறும் கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாளுக்கு இவருடைய பிதா மாதா குடும்ப சகிதம் இராஜகம்பீரத்துக்குப்போய்ப் பக்தியுடன் திருநாள் பூசைகண்டு, அங்கிருந்து தங்கள் சொந்த ஊர் பசலைக்கும்போய் சிலநாள் அவ்விடம் தங்கி வருவார்கள்.

சந்தியாகப்பரின் தாய் தந்தையர் வருஷாவருஷம் இராஜகம்பீரம் திருநாளுக்கு ஆவலாய்ப் போய் வந்ததற்கு ஒரு விசேஷ காரணமுண்டு. இது பிற்காலத்தில் சந்தியாகப்பர் சுவாமியின் வாய்மொழியாலேயே அறிந்த விஷயம். அஃதாவது: சந்தியாகப்பருடைய தகப்பனார் முதலில் இந்துவாயிருந்தவர். சூரப்ப பிள்ளை என்று அப்பொழுது அவருக்குப் பெயர் வழங்கிவந்தது. உடன் பிறந்த சகோதரர்கள் வேறு மூன்றுபேர் அவருக்கிருந்தார்கள். இந்நாலுபேரும் விவாகம் செய்து சிலகாலம் சென்றிருந்தும், அவர்களில் ஒருவருக்காகிலும் புத்திர சந்தானபாக்கியம் இன்னும் கிடையாதிருந்தது. இதனால் அவர்கள் மனம் வெகுவாய் துக்கித்திருந்ததைக்கண்டு அநுதாபப்பட்ட சில நண்பர்கள், இராஜகம்பீரத்துக்குத் திருயாத்திரைபோய், விசுவாசநாதர் சுவாமி (Fr. A. Martin, S. J) கல்லறையில் ஒரு காணிக்கை செலுத்தினால், கடவுள் கடாட்சத்தால் மகப்பேறு கிடைக்கக்கூடுமென்று ஆலோசனை கொடுத்தனர். இந்த ஆலோசனையைப் பின்சென்று, அடுத்துவந்த இராஜகம்பீரம் திருநாளுக்கு இவர்களெல்லாம் திருயாத்திரிகளாகச் சென்றனர். அதுசமயம் சேசுசபை ஹார்லின் (Fr. Hurlin) சுவாமியவர்கள் அவ்விடம் வந்திருந்தார். அவரிடம் தாங்கள் திருயாத்திரையாய் வந்ததின் கருத்தை அறிவித்தனர். விசுவாசநாதருடைய மன்றாட்டால் நீங்கள் கேட்கும் வரம் உங்களுக்குக் கிடைக்கவேண்டுமானால், முதல் முதல் நீங்கள் ஞானதீட்சை பெற்றுக் கிறீஸ்துவர்களாகவேண்டுமென்றார் மேற்சொன்ன குருப்பிரசாதி. நாலு சகோதரர்களில் இருவர் இதற்கு சம்மதித்தனர். இவ்விருவர்களில் சூரப்பப்பிள்ளை ஒருவர். தாமதமின்றி அவரும் அவர் மனைவியும் வேத சத்தியங்களைக் கற்றுணர்



ந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அதிசீக்கிரம் ஒரு புத்திரனும் உதித்தான். அந்த செல்வப் புத்திரன்தான் நமது சந்தியாகப்பர். சிசுவாக இராஜகம்பீரத்தை நோக்கித் தந்தையின் பக்கத்தில் தாம் தமது சிறிய கால்களால் தத்திப்பித்தி நடந்து சென்ற ஞாபகம் வயோதிக காலத்தில் நமது சந்தியாகப்பருக்கு வெகு ஆனந்தமாயிருந்தது.

இவ்வழக்கப்படி 1854-ம் ௵, இவர்கள் பசலை சேர்ந்ததும், அப்பொழுது ஏழுவயசுப் பாலியனாயிருந்த சந்தியாகப்பனைப் பல்லக்கில் ஏற்றி ஆடம்பரம்செய்து, பந்துமித்திரர்களுக்கு சந்தனம் தாம்பூலம் முதலியன வழங்கி, உபாத்தியாயருக்கு தமிழ்மாக்கள் ஆசாரப்படி தக்ஷிணை சமர்ப்பித்து பிள்ளையை முதல் முதல் திண்ணைப்பள்ளியில் வாசிக்க வைத்தார்கள்.* இவ்வைபவம் நடந்து சில தினங்கள் கழிந்ததும், பிதா மாதாக்கள் பாலியனையும் அழைத்துக்கொண்டு, மதுரைக்குத் திரும்பிவிட்டனர். அது சமயம் மதுரையில் கத்தோலிக்குப் பாடசாலை இல்லாததால், ஒரு பிராமண இந்து திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சந்தியாகப்பன் சிலகாலம் படித்துவரும்படி நேர்ந்தது.

இதுசமயம் சேசுசபை சங். திரிங்கால் அருளப்பர் சுவாமியவர்களுடைய பிரயத்தனத்தால், மதுரையில் ஒரு கத்தோலிக்குப் பாடசாலையும் உட்பிள்ளைகள் மடமும் ஏற்பாடாகிவந்தன. 1856-ம் ௵ கிரகப்பிரவேசம் செய்யப்பெற்ற இவ்வுட்பிள்ளைகள் மடத்தில் சேர்ந்திருந்த முப்பத்தாறு சிறுவருள் நமது சந்தியாகப்

---

* அந்தோ தலைமுறை தலைமுறையாய்த் தமிழ் மாந்தருக்குள் வழங்கி வந்த நல்லாசாரங்கள் பல இக்காலத்தில் என்னமாய்த் தட்டுக்கெட்டுப் போயின! பிள்ளை கல்வி கற்கப் பள்ளிக்கூடம் செல்லும் முதல் நாள் ஓர் சுபநாளாக, விசேஷ வைபவங்களுடன், குடும்பத்தில் கொண்டாடப்பட்டு வந்தது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்,"—"கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சைபுகினும் கற்கை நன்றே!" என்ற ஔவையார் மூதுரைப்படி, நமது முன்னோர் கல்வியறிவை எவ்வளவு நன்கு மதித்து அபிமானித்து வந்தனரென்பது, மேற்சொன்ன ஒரு விஷயத்தாலேயே தெற்றென விளங்கும். அநேகாநேக நூற்றாண்டுகளாய்ச் சீரும் சிறப்பும் வாய்ந்து, சிறந்த பன்னூல்களால் பெருமைபெற்றிலங்கிய அழகிய செந்தமிழ், அந்தோ! இக்காலத்தில் தமிழ் மைந்தர்களாலேயே பெரும்பாலும் கைநெகிழப்பட்டு நிற்கின்றது!

பனும் ஒருவர். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்ற பழமொழிக்கேற்க, அத்தனை இளைஞருள், நற்குணத்திலும் புத்திசாலித்தனத்திலும், நேர் ஒழுக்கத்திலும் பாலியன் சந்தியாகப்பன் விசேஷித்து விளங்கினார். இதை நன்கு கவனித்த நல்லிதயன் திரிங்கால் அருளப்பர் சுவாமியார் இப்பாலியன்மீது விசேஷ அன்பும் அபிமானமும் உள்ளவரானார். அன்னிய தேசத்தவராயிருந்தும், இந்த அருளப்பர் சுவாமியார் செந்தமிழ் நேயராய்ச் சிறந்து விளங்கினது தமிழ் நாடெல்லாம் தெரிந்த விஷயமே

**இளமையில் செந்தமிழ்ப் பயிற்சி.**

தினம் சாயரட்சை, பாலியன் சந்தியாகப்பனும், இன்னொரு சிறுவனும், இவர்களோடு பாடசாலையில் உபாத்தியாயராயிருந்த தமிழ் வித்வான் ஒருவரும் தமது அறைக்கு வரும்படி செய்வார். சிறுவர் இருவரும் வீரமாமுனிவரது தேம்பாவணியிலிருந்து ஓரோர் விருத்தங்களை இனிதாய்ப்பாட, பாடின ஒவ்வொரு விருத்தத்துக்கும் வித்துவான் பதவுரை பொருளுரை பகர்ந்து வியாக்கியானம் செய்வார். இவ்வண்ணம் சிறுபத்திலேயே செந்தமிழ்ப் பாலுண்டு வளர்ந்தார் நமது சந்தியாகப்பர்!

**பஜனைத் தலைவன்.**

மதுரையில் இந்துமதச் சிறுவர்கள் தங்கள் தேவதைகளைத் துதித்துப் பஜனைகள் பாடிக்கொண்டு நகர் வீதிகளில் செல்லுவதையும், நகர் வாசிகளுக்கு அது வெகு மனோரஞ்சிதமாயிருப்பதையும் கண்ணுற்ற அருளப்பர் சுவாமியார் மனதில் ஒரு யோசனை உதித்தது. சிறுவர்கள் நாவால் ஏக மெய்க்கடவுளை ஸ்துதித்து, சேசுக்கிறீஸ்துநாதருடைய சத்திய திருமறையை மதுரை நகரில் பிரஸ்தாபிக்க ஒரு யுக்தி செய்தார். தமது பாடசாலை இளைஞர்களில் சிலரைத் தெரிந்தெடுத்து, இவர்கள் யோக்கியமான நல்லாடை அணிந்து, மேள மரியாதையுடன் சத்தியவேதக் கீர்த்தனை பாடல்கள் பாடிக்கொண்டு நகர் வீதிகளில் போகும்படி செய்தார். இந்நவீனம் இந்து ஜனங்கள் மனதைக் கவர்ந்தது. சிலர் இச்சிறுவர்களைத் தங்கள் இல்லத்துக்குள் வரவழைத்து, இவர்களுடைய பாடல்களைக்கேட்டு சந்தோஷப்பட்டு, சிறுவர்



களைக் கொண்டாடி உபசரித்து அனுப்புவார்கள். **தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனைகள்** எனும் அருமையான ஞானக் கவிகளால், பிற்காலத்தில் தமிழ் மக்கள் மனதை மகிழச்செய்த பாலியன் சந்தியாகப்பனே மேற்கூறிய பஜனை சிறுவர்களுக்குத் தலைவனாய்க் கீர்த்தனைகள் பாடிவந்தார்.

**தேவ அழைப்பு.**

ஓர்நாள் திரிங்கால் அருளப்பர் சுவாமியார் நமது பாலியனைத் தமது அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய்: "சந்தியாகு, நாகபட்டணம் கலாசாலையில் போய்ப் படிக்க உனக்கு இஷ்டமா?" என்று வெகு வாஞ்சையுடன் வினவினார். இது செய்தி கேட்டதும், சந்தியாகப்பனுக்குண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. நாகபட்டணம் சென்று படித்தால், ஓர்நாள் குருவானவராகலாம் என்ற எண்ணமும் விருப்பமும் அக்ஷணமே பாலியன் இருதயத்தில் பளிச்சென்றுதித்து மனமகிழச்செய்தது. ஆகையால் அதிசீக்கிரம், அச்சமயம் நாகபட்டணத்துக்குப் பயணமாயிருந்த ஒரு குருவானவருடன், நமது சந்தியாகப்பனும் பிரயாணப்பட்டார். அக்காலம் ரயில் கிடையாது. நாட்டு வண்டிகளில் எட்டுநாள் பிரயாணம்செய்து நாகபட்டணம்சேர்ந்து, கலாசாலையில் உட்பிள்ளையாக ஒப்புக்கொள்ளப்பட்டார். சேசுசபை சங். புருனி (Bruni) சுவாமியார் அப்பொழுது கலாசாலைக்குச் சிரேஷ்டராயிருந்தார். திரிங்கால் சுவாமியாரைப்போலவே, இவரும் பாலியன்மீது விசேஷ அன்பு வைத்திருந்தார்.

அருமை மைந்தன் நாகபட்டணம் போய்விட்டான் என்றறிந்ததும், பெற்றோர் ஆருத்துயருற்று அழுதுபுலம்பினர். விசேஷமாய் தாயானவள் புத்திர ஏக்கத்தால் சிந்தை கலங்கினவள்போல், ஊணுறக்கம் ஒடுங்கி, உடல் மெலிந்து, இராப்பகல் ஓயாமல் மகனை நினைத்துக் கண்ணீர் வடித்து வந்தனள். இவ்வாறிருக்க, 1859-ம் ௵ லீவு நாட்களுக்காகப் பையன் மதுரைக்கு வரும்படி நேர்ந்தது. இனி நாகபட்டணத்துக்கு மகனைத் திரும்பிப் போகவிடப்படாதென்று தகப்பனார் சித்தாந்தம் வைத்து, மதுரை சர்க்கார் பள்ளிக்கூடத்தில்சேர்ந்து வாசிக்கும்படி ஏற்

பாடு செய்துவிட்டார். ஆனால் பங்கு சுவாமியார் அவரை அழைத்து, மதுரையிலேயே கத்தோலிக்குப் பாடசாலையில் தற்போது இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கப்பட்டு வருவதால், வேறு பாடசாலைக்குப் பையனை அனுப்புவது ஒழுங்கல்லவென்று கண்டிப்பாய்ச் சொன்னதின்பேரில், அடுத்த மாதமுதல் பையனைத் திரும்பக் கத்தோலிக்குப் பாடசாலைக்கு அனுப்பச்சம்மதித்தார். ஆனாலும் உட்பிள்ளையாக விடவில்லை. வீட்டில் தங்கி வெளிப்பிள்ளையாக இருந்து படித்து வரும்படி ஏற்பாடு செய்தார்.

**சேசு சபையை நாடிய ஆவல் நோக்கம்.**

அக்காலம் சுதேச குருக்கள் மகா அபூர்வம். சேசு சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெறவேண்டுமென்று தேவ அருளால் பாலியன் சந்தியாகப்பன் இருதயத்தில் ஏற்கனவே உதயமான எண்ணமும் ஆசையும் நாளுக்கு நாள் அதிகரித்து, பதினாறு வயது நடக்கும்போது அதுவே அவர் மனதில் பெருங்கவலையும் ஏக்கமுமாய் நிலைகொண்டுவிட்டது. தான் ஆசித்த காரியம் சித்தியாகுமோ என்னமோவென்ற சஞ்சலக் கவலையால், முகம்வாடி மெலிவுற்றுக் காணப்பட்டார். தன் மனதில் நிகழ்ந்ததை எவரிடமும் சொல்லத் துணியவில்லை. பாலியன் முகத்தில் தோன்றிய மாற்றத்தைக் கவனித்த திரிங்கால் சுவாமியார், பையனைத் தனிமையாக அழைத்து, காரணம் விசாரித்தார். துவக்கத்தில் கூச்சப்பட்டாலும், குருவானவர் சொன்ன அன்பான வார்த்தைகளால் தைரியம் அடைந்து மனதிலுள்ளதையெல்லாம் தாராளமாய் வெளியிட்டார். குருவானவர் சந்தோஷப்பட்டு, பாலியன் மனதைத்தேற்றித் தைரியம்சொல்லி அனுப்பினார்.

**தந்தையின் மனக்கோதிப்பு.**

மேற்சொன்ன சம்பவத்துக்குப்பின், சமயம் பார்த்திருந்து, 1862-ம் வருடம் ஜூன்-மீ, திரிங்கால் சுவாமியார் பையனுடைய தந்தையை வரவழைத்து மகன் கொண்டிருக்கும் மேலான கருத்தை அவருக்குத் தெரிவித்தார். இதைக்கேட்டதும் அவருக்கு அடங்காக் கோபமும் ஆத்திரமும் பொங்கி, குருவானவரோடு வாக்குவாதம் செய்து கூக்குரலிட ஆரம்பித்துவிட்டார்.



இது சமயம் பள்ளிப் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சந்தியாகப்பனிடம் சில பிள்ளைகள் ஓடிவந்து: "ஏ! சந்தியாகு, நீ சுவாமியாராகப் போகிறாயாம். அது உன் தகப்பனாருக்குத் தெரிந்து, அவர் சுவாமியாரோடு சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார்" என்றனர். இதைக்கேட்டதும் சந்தியாகப்பனுக்குப் பயமும் திகிலும் உண்டாகிவிட்டது. தான் இரகசியமாக வைத்திருந்த சங்கதி வெளியாய்விட்டதே என்று வெட்கமும் உண்டாய்விட்டது. ஆனதால் அன்று முழுதும் சுவாமிமார் பங்களாவிலேயே தங்கிவிட்டார். மகன் வீட்டுக்கு வராததால் தகப்பனார் விசாரப்பட்டு, மறுநாள் வந்து பிள்ளையைக் கையோடு வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார். அதுமுதல் பையன் சுவாமிமார் பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் தடுத்து நிறுத்திவிட்டார். சந்தியாகப்பனோவென்றால், தன் மனதில் குடிகொண்டிருந்த துறவற ஆசையை சற்றும் விட்டுவிடவில்லை.

**தந்தையின் தப்பெண்ணம்.**

இவ்வளவு சிறுவயதில் இவ்வித எண்ணங்கள் உண்டாவானேன்? இதன் காரணம் யாதாயிருக்கலாம்? என்று சஞ்சலமுற்று வருந்திய தந்தை மனதில் அபத்தமான ஒரு தப்பெண்ணம் புகுந்துவிட்டது. சுவாமிமார் ஏதோ மருந்திட்டு, தன் குமாரன் புத்தியை மாற்றிவிட்டனரென்று எண்ணிவிட்டார். மனக்கொந்தளிப்பில் முன்னும் பின்னும் யோசியாமல், மகனை ஒரு இந்துப் பரதேசியிடம் கூட்டிக்கொண்டு போனார். அவன் ஏதோ சில பச்சிலைச் சாற்றைச் சிறுவன் உள்ளங்கையில் ஊற்றி நோட்டம் பார்த்து: "ஆஹா! தெரியுது! தெரியுது! மாயா மருந்தால் அந்த சுவாமிமார்கள் உன் புத்தியை மாற்றிவிட்டார்கள்" என்று உளறிக்கொண்டு, வேறு சில பச்சிலை மூலிகைகளைச் சேர்த்து சாறு பிழிந்து உள்ளுக்குக் கொடுத்தான்.

**பரதேசி கொடுத்த பச்சிலை மருந்தால் பட்டபாடு.**

பரதேசி கொடுத்த பச்சிலை மருந்தால், பாலியன் பட்டபாடு, அந்தோ! பரிதாபம்! நோயுற்று, உடல்மெலிந்து வேற்றுருவானான் பையன்! உள்ளத்தைக் கவர்ந்திருந்த துறவற

அபிலாசைமாத்திரம் வேற்றுருவாகவில்லை, — சற்றும் மெலியாவில்லை— நாளுக்கு நாள் அதிக ஊக்கம் அடைந்தே வந்தது. பரதேசியின் ஜம்பம் பலிக்கவில்லை. இனி பந்து மித்திரர்களும்,

**பந்து மித்திரர் பஞ்சாயம்.**

குடும்பத்தின் அபிமானிகளான சில பெரிய மனுஷாட்களும் பாலியன் மனதை மாற்றப் பலவாறு பிரயத்தனப்பட்டனர்,—தத்தம் புத்திக்குத் தோன்றியவாறு ஞாயங்கள் பேசி பாலியன் மனதைப் பஞ்சரித்தனர். எல்லாம் வீண் பிரயத்தனம்! சந்தியாகப்பன் ஒன்றுக்கும் அசையவில்லை.

சமயம் பார்த்து பிள்ளை தப்பித்தோடிவிடக் கூடுமென்றஞ்சி, பெற்றோரும் உற்றோரும் சதா விழிப்பாயிருந்தனர்.

**வீட்டிலேயே கைதி.**

பாலியனுடைய தமக்கை புருஷனும், பெரிய தகப்பனார் மகனும், இவ்விருவரும் கைதியைக் காக்கும் சிப்பாய்கள்போல், பையன் வீட்டிலிருந்தாலும் வெளியே சென்றாலும் விட்டுப்பிரியாமல் காவல் காத்துவந்தனர். உஜாருக்குத் தாழ்வில்லை! ஆயினும் சமயம் வாய்த்தது! கைதியும் கைநழுவிவிட்டார்! எப்பொழுதும் முகம் வாடியிருந்த பாலியனை உற்சாகப்படுத்தும்படி, காவலர் இருவரும் பையனை வெளியே உலாவக்கூட்டிக்கொண்டுபோய்,

**கைதி காணாமற் போனது.**

மிட்டாய் வாங்கிக்கொடுப்பதற்காக ஒரு கடைக்குச் சென்றனர். கடையில் ஏராளமான ஜனக்கூட்டம். வியாபாரம் வெகு ஜோராய் நடந்துகொண்டிருந்தது. காவலர் இருவரும் பதார்த்தங்கள் இனுசு பார்ப்பதிலும் விலை பேசுவதிலும் கவனமாயிருந்தனர். இதுதான் சமயமென்று, சந்தியாகப்பன் தேவதாயாரை மனதில் பிரார்த்தித்துக்கொண்டு, ஜனக்கும்பலில் நுழைந்து, சந்துபொந்துகளில் ஒளிந்து ஓடி சுவாமிமார் பங்களாவில் அடைக்கலம் புகுந்துவிட்டனன். சற்று நேரத்துக்குள் பெற்றோர் வகையறா பிள்ளையைத்தேடிக் கூக்குரல்போட்டுக்கொண்டு பங்களாவை நோக்கி வந்தனர். பையனோ அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துகொண்டான். இரவு வெகு நேரமட்டும் காத்திருந்தும் மகனைக் காணாததால் அழுது புலம்



பிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினர். அன்று தானே நடுச்சாமத்தில் நம்பிக்கையுள்ள இரு ஆட்கள் துணை

**சாமப் பயணம்.**

யுடன், திரிங்கால் சுவாமியார் பையனைத் திண்டுக்கல்லுக்குப் பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டார். சாலை மார்க்கமாய்ச் சென்றால் ஆபத்தென்று கூடியமட்டும் பக்கத்துக் கிராமங்கள் வழியாக மேடு பள்ளம் வாய்க்கால் வரப்புகள் தாண்டிக் கால் நடையாகவே பாலியப் பிரயாணி நடந்து சென்றார். இவ்வாறு செல்லுங்கால் தடை ஒன்று நேர்ந்தது. பாலியனையும் பாலியன் தந்தையையும் நன்கறிந்த பிஷர் துரை (Fischer) தற்செயலாய்க் குறுக்கிட்டு, பையன் ஒருவிதமாய் ஒதுங்கிப்பதுங்கி நடப்பதைக் கண்டு கூவி அழைத்து: "சந்தியாகு, எங்கே போகிறாய்? இப்படிக் கால் நடையாய்த் தனி வழிபோக உன் தகப்பனார் சம்மதித்தனரோ?" என்று விசாரித்தார். தருணத்துக்குத் தகுந்த யுக்தியுடன்

**ஆபத்தில் யுக்தி.**

பதிலளித்து, "நான் தனியே செல்லவில்லை. இதோ பாருங்கள்! துணைக்கு இரண்டாள் கூட வருகின்றார்கள்" என்று கூட வந்த ஆட்களைச் சுட்டிக்காண்பித்து வழியே சென்றார். இரண்டரை நாள் இவ்விதம் பிரயாணம் செய்து திண்டுக்கல்போய்ச் சேர்ந்தார். 85940

அது சமயம் 1862-௵, ஜூலை-௴ மிக. வந். அலெக்சிஸ் கானோஸ் ஆண்டவர் திண்டுக்கல்லில் விஜயம் செய்திருந்தார்கள். பாலியனுடைய தைரியத்தைக்கண்டு சந்தோ

**திண்டுக்கல்**

ஷப்பட்டு அவனை ஆசீர்வதித்து, சிலநாள் அவ்விடம் நிறுத்திவைத்துப் பின்பு திருச்சினாப்பள்ளிக்குப் போகும்படி ஏற்பாடு செய்தார். [illegible] யுடன் கால் நடையாகவும், சமயம் கிடை[illegible] வண்டிகளில் ஏறிக்கொண்டு மூன்று நா[illegible] பயண[illegible] செய்து திருச்சி சேர்ந்தார். நடந்த அ[illegible] இளைஞனுக்கு இரு காலிலும் வீ[illegible] வெகுவாய்

**கால் நடையால் காலில் ஊனம்.**

வருத்தப்பட்டுப் பல[illegible] படுக்கையாயிருந்தார். சொஸ்தம[illegible]முன்போலவே இரண்டு° நாள் பிரயாணம் [illegible] ஆகஸ்டு-௴

நாகபட்டணம் போய் சேர்ந்தார். இவ்விஷயம் இம்மட்டில் நிற்க:—

**பெற்றோர் துயர்.**

மதுரையில் சந்தியாகப்பனுடைய பிதா மாதா பட்ட சிந்தாகுலம் எவ்வளவென்று உரைக்கும் தன்மையன்று. மகன் சென்றதெவ்விடமென்று தெரியாது, நாலாபக்கமும் விசாரித்துத் தேடி, பலநாள் ஆறாத்துயருற்று அழுது தவித்தனர். கடைசியாய், மகன் நாகபட்டணம் போய்விட்டானென்றறிந்ததும், பையனுடைய தாயார் உடனே கொடைக்கானல் மலைக்குப் புறப்பட்டுப்போய், மேற்றிராணியார் ஆண்டவரிடம் சென்று அபயமிட்டாள்.

**பெற்ற மனம் பித்து.**

ஆண்டவர் அநுதாபப்பட்டு, "பயப்படவேண்டாம்! சந்தியாகு சீக்கிரம் மதுரைக்குத்திரும்பி வந்துவிடுவான்," என்று தேறுதல் சொல்லி அனுப்பினார். இதற்கிசைய கலாசாலை விடுமுறை காலமும் அடுத்து வந்ததால், சில நாட்களுக்குள் (செப்டம்பர்-மீ) சந்தியாகப்பன் மதுரை வந்துசேர்ந்தார். உடனே பங்கு சுவாமியார் அவருடைய தந்தையை வரவழைத்து; "உமது மகன் வந்து விட்டான். வீட்டுக்கு வருவான். அவன் தேவ அழைத்தலை உறுதியாய்ப் பின்பற்றியிருக்கிறான், அதற்குத் தடை செய்தல் நல்லதல்ல" என்று சொன்னார்.

**போன மகன் திரும்பி வரல்.**

அதற்குத் தகப்பனார்: "வாவு காலம் நாற்பதுநாளும் பையனை நான் என் வீட்டில் வைத்துப் பரீட்சித்துப் பார்க்கிறேன். அதன்மேலும், அவன் கருத்து மாறாதிருந்தால், நானே பையனை உங்களிடம் கொண்டு வந்து ஒப்பித்துவிடுகிறேன்" என்று சொல்லி பிள்ளையை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனார்.

**தந்தையின் நல்லெண்ணம்.**

நாற்பது நாளும் பாலியன் மனதை மாற்றவேண்டிய பிரயத்தனங்களெல்லாம் செய்தனர். "சிரேஷ்ட புத்திரனுச்சே நீ! குடும்பத்தை விட்டு நீ நீங்கலாகுமோ? நீ போய்விட்டால், எங்கள் அந்திய காலத்தில் எங்களுக்கு உதவியாயிருப்பவர் யார்? உன் கூடப்பிறந்த சிசுக்களுக்கு ஆதரவு நீயன்றோ?" என்று பலவாறாய்ப் புலம்பி, பிதா பெருமூச்சு விட்டார்;



மாதா கண்ணீர் வடித்துக் கதறினாள். பந்து மித்திரர்களும் பெரிய மனுஷாட்களும் பெற்றோருக்குச் சிபாரிசாய் வந்தனர். இதுவெல்லாம் கூரிய வாள்போல் பாலியன் மனதை ஊடுருவி வருத்தி வாதித்தன. என்றாலும், சர்வேசுரன் தன்னைக் குருப்பட்டத்துக்கழைக்கிறாரென்று அவர் மனதுக்குப் பிரகாசமாயிருந்ததால், தேவ அழைத்தலைப் பின் செல்லுவதில் சற்றும் தத்தளிக்கவில்லை. அவ்விஷயத்தில் ஒரே உறுதியாயிருந்தார். இவ்வளவு சிறு வயசில் இந்தத் திடன் தேவ ஏவுதலாலேயே ஏற்பட்டிருக்கவேண்டுமென்று தந்தையானவர் நன்குணர்ந்து, நாற்பதுநாள் முடிந்ததும், சொன்ன வாக்குப்படியே பிள்ளையைப் பங்குசுவாமியாரிடம் ஒப்புவித்து, தேவசித்தத்துக்கு இனி தான் தடைசெய்ய அருகனல்லவென்றுரைத்தார்.

**பாலிய மனதின் ஊக்கம்.**

இச்சந்தோஷ சங்கதியைக் கேட்டதும், சந்தியாகப்பன் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்து, நவம்பர் மாதமே நாகபட்டணத்துக்குப் புறப்பட்டார்.

**ஊக்கத்தின் பலன்.**

அந்தோ! தேவ அழைத்தலைப் பின்பற்றுவதில் பாலியனுக்கு நேர்ந்த போராட்டங்கள் முற்ற முடியவில்லை. தந்தை மனம் ஒருவாறு சம்மதப்பட்டிருந்ததென்றாலும், தாயின் மனம் சாந்தப்படவில்லை. புத்திர ஏக்கம் மிகுந்தவளாய், 1863-ம் ஷை வாவு காலம் நெருங்கியிருக்கும் சமயம் நாகபட்டணம் போய்சேர்ந்தாள். மகனைக்கண்டு அழுது பிரலாபித்தாள். தன்னுடன் வீட்டுக்கு வரும்படி கெஞ்சினாள், கண்ணீர் வடித்தாள், தாயின் துயரத்தைக்கண்டு பிள்ளை மனம் பதைத்துத்துடித்தது; என்றாலும் தேவ அருளால் உண்டான மேலான கருத்தில் தத்தளிக்கவில்லை.

இதுகாலம் பாலியன் கல்விப்பயிற்சிக்கு நேரிட்ட இடையூறுகள் மேற்கூறிய விஷயங்களால் நன்கு விளங்கும். ஆரம்பத்தில் இவருடன் ஒரேவகுப்பில் வாசித்தவர்கள் இப்பொழுது நாலாவது வகுப்பிலிருந்தனர். இவரோ இரண்டாவது வகுப்பில் சேர்ந்து படிக்

**கலாசாலை ஜீவியம்.**

கும்படி நேர்ந்தது. ஆதியில் நாகபட்டணம் கல்லூரி குருப்பிரசாத அந்தஸ்தை நாடிய சிறுவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்பட்ட ஒரு மடமாகவேயிருந்தது. முதல் முதல் 1868-ம் வருஷம்தான், யூனிவெர்சிட்டி என்ற சென்னை சர்வகலா சங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு சர்க்கார் அங்கீகாரம்பெற்ற கலாசாலையாயிற்று. இதே வருஷம் 1868-ம் ௵ டிசம்பர்-௴ நமது சந்தியாகப்பர் மெட்ரிக்குலேஷன் (Matriculation) பரீட்சை எழுதி, பரீட்சையில் வெற்றியும் அடைந்தார்.

அடுத்த வருஷம் F.A. என்ற உயர்தரக்கல்வி பயின்றுகொண்டிருக்கும்பொழுது கடுமையான சுரம் கண்டு வெகு வருத்தப்பட்டு மரணாவஸ்தையானார். ஆகஸ்டு-௴ 14-௳, வியாதி அகோரித்து, அவஸ்தைப் பூசுதலும் நிறைவேறிற்று.

**மரணாபத்து.**

சேசுசபையில் உட்பட சந்தியாகப்பன் மனதில் குடிகொண்டிருந்த ஆவலும், அதனால் பட்ட சிரமங்களும் துன்பங்களும் ஆதியோடந்தம் நன்றாய் அறிந்திருந்த கானோஸ் ஆண்டவர், அப்பொழுது மிஷனில் சேசுசபைக்கு அதிசிரேஷ்டராகவும் இருந்தமையால், வியாதியஸ்தன் உயிர் பிரியுமுன் சேசுசபை வார்த்தைப்பாடு கொடுக்கலாமென்று உத்தரவு செய்திருந்தார். இதிப்படியிருக்க, கலாசாலை சிரேஷ்டர் (Batru) பாத்ரு சுவாமியார் பட்ட சிந்தாகுலம் இவ்வளவென்றல்ல. திரிங்கால் சுவாமியார், ப்ருனி சுவாமியார் இவர்களைப்போல், இருவரும் சந்தியாகப்பனை நன்குமதித்து அபிமானித்து வந்தார். தேவகிருபையால் வியாதிக்காரனுக்கு நல்லாரோக்யம் கிடைக்கும்படி தாமும் வெகு உருக்கமாய் ஜெபித்ததுமன்றி, கலாசாலையிலுள்ள சுவாமிமார் பிள்ளைகள் யாவரும் இந்தக் கருத்துக்காக வேண்டிக்கொள்ளும்படி செய்தார். மேலும் தான் மன்றாடிக் கேட்ட வரம் கிடைக்கும்படி கலாசாலைப் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரைக்குறித்து ஒரு பொருத்தனையும் செய்துகொண்டார். தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள் ஆகஸ்டு-௴ 15-ம் தேதி நாள்முழுதும் வியாதியஸ்தனுக்காக ஜெப வேண்டுதல்கள் நடந்துகொண்டிருந்தன.

**ஆபத்து நீங்கல்.**

தேவ கிருபையால் மறுநாள்முதல், ஜுரம்



தணிந்து ஆபத்து நீங்கி நாளாவட்டத்தில் பூரண சௌக்கியம் அடைந்தார். சுகமடைந்ததும், 1869-ம் வருஷம் ஜனவரி-௴ 16-௳, சேசுசபையில் உட்பட்டு நவசன்னியாசம் ஆரம்பித்தார்.

**சேசுசபை நவசன்னியாசம் முதல் வார்த்தைப்பாடு.**

இருவருஷம் நவசன்னியாசம் செய்து, 1871-ம் வருஷம் ஜனவரி-௴ 21-௳ ஆனந்த அகமகிழ்ச்சியுடன் சர்வ வல்லபராகிய நித்திய சர்வேசுரனைத் தன் உள்ளத்தில் ஸ்துதித்து நேசித்து சேசுசபையில்: "நித்திய கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல்" என்ற முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார். அலையிலும் புசலிலும் அடிபட்டலைந்து தவித்த கப்பல் தேவாதீனமாய்த் துறைமுகம் சேர்ந்ததுபோல், நானும் தேவ திருவருட் கிருபையால் இன்று பரலோகத் துறைமுகம் சேர்ந்தேன் என்றுணர்ந்து உள்ளம் பூரித்தவராக அவர் முக நோக்கத்திலேயே விளங்கிற்று.

முதல் வார்த்தைப்பாடு கொடுத்தபின், பல வருஷ காலம் கலாசாலையிலேயே ஆசிரியர் அலுவலும், உட்பிள்ளைகளை விசாரிக்கும் அலுவலும் பார்த்துக்கொண்டு வந்தார்.

**கலாசாலையில் ஆசிரியர்.**

தம் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டே தாமும் F.A., B.A., என்ற பரீட்சைகளுக்கு சிரேஷ்டர் கட்டளைப்படி, ஆயத்தஞ்செய்து, அந்தப் பரீட்சைகளிலெல்லாம் வெற்றியடைந்தார். அவ்வண்ணமே, ஆசிரியர் அலுவல் பார்த்துக்கொண்டே, குருப்பட்டத்துக்கு வேண்டிய தத்துவ சாஸ்திரமும் தேவ சாஸ்திரமும் ஆராய்ச்சி செய்துவந்தார். குருப்பட்டம் பெறுமுன்னமே, பிதா மாதா பரலோக பிராப்தியாகிவிட்டனர். சந்தியாகப்பர் இவ்வாறு

**தமிழ்ப் பாட்டுக்கு அதிர்ஷ்டம்.**

ஆசிரியராயிருந்த காலத்தில்தான் தமிழ்ப் பாடல்கள் கலாசாலையில் தொனித்து சிறப்பும் மதிப்பும் பெற்றிலங்கியது. இப்பொழுது திருச்சி, உலக இரட்சகர் கோவிலில் உதவி குருவானவராயிருக்கும் சங். பரஞ்சோதிநாதர் சுவாமியவர்கள் அக்காலம் நாகபட்டணத்தில் உட்பிள்ளையாகப் படித்துக்கொண்டிருந்தார். இவர் பின்வரும் வர்த்தமானத்தை சொல்லுகின்றார்:—

**சங். பரஞ்சோதிநாதர் சுவாமியின் வாக்குமூலம்.**

"நாகபட்டணம் அர்ச். சூசையப்பர் கலாசாலையில் திவ்விய பூசை நேரத்தில் முதல்முதல் தமிழ்ப் பாடல் பாடின சந்தர்ப்பம் இன்றும் என் ஞாபகத்தில் வெகு தெளிவாயிருக்கின்றது. 1873-ம் ௵ மார்ச்சு-௴ 1-ம் ௳ அர்ச். சூசையப்பர் வணக்கமாதம் முதல் நாள்,— சாலை போஜனமானதும்,—எங்களை விசாரித்துவந்த சந்தியாகப்பர் சுவாமியிடம் நான் சென்று: 'என்ன! நமது கலாசாலைப் பாதுகாவலர் அர்ச். சூசையப்பருக்கு ஸ்தோத்திரமாக இன்று பூசையில் தமிழ்க் கீர்த்தனை ஒன்றும் பாடவில்லையே!' என்று வியசனப்பட்டேன்.—'என் செய்ய! இங்கு தமிழ்ப்பாட்டு பாடும் பையன்களைக் காணோமே! உனக்குப் பாடத்தெரியுமோ?' என்றனர்.—'எனக்கா தெரியாது! நன்றாய்ப் பாடுவேனே!' என்றேன் நான், பாலியத் துணிவுடன்!—'அப்படியானால், தமிழ்ப் பாட்டு ஒன்று பாடு பார்ப்போம்!' என்றார். நானும் பாடினேன். கவனமாய்க் கேட்டிருந்து, இன்னொருதரம் பாடென்றார். நான் அந்தப் பாட்டைத் திருப்பிப் பாடிக்கொண்டிருக்கும் பொழுதே, தமது கைப்புத்தகத்தில் குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்து, பாடி முடிந்ததும்: 'நல்லது! விளையாடப்போ!' என்று என்னை அனுப்பிவிட்டார். அன்றுதானே, அந்நேரம் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, சந்தியாகப்பர் சுவாமியார் என்னைக் கூப்பிட்டு, ஒரு துண்டுக் காகிதத்தை என் கையிற் கொடுத்து: 'அதில் வரைந்திருக்கும் பாட்டைப் பாடு, பார்ப்போம்' என்றார். நான் காலையில் பாடிய இராகத்துக்கிசைய அந்தப் பாடலாகிய அர்ச். சூசையப்பர் பேரில் அமைக்கப்பட்ட கீர்த்தனையை திகைப்பின்றி பாடினேன்! மறுநாட் காலை திவ்விய பூசையிலும் தனிமையாகவே மேற்சொன்ன கீர்த்தனையைப் பாடினேன். அதிசீக்கிரம், நாலைந்து பிள்ளைகள் என்னுடன் சேர்ந்தனர். இவ்வாறு, நாகபட்டணம் அர்ச். சூசையப்பர் கலாசாலையில் தமிழ்ப் பாடல் பஜனை முதல் முதல் ஸ்தாபகம் பெற்றது." *

---

* அந்தோ! செந்தமிழ் எத்தன்மையோ, அத்தன்மையே தமிழ்ப் பாடலும்,—விசேஷமாய் கிறீஸ்துவர்களுள்,—சீர்குலைந்து நிற்கின்றது!



மேற்சொன்ன சம்பவம் நடந்ததுமுதல், சந்தியாகப்பர் சமயத்துக்குச் சமயம் புதிதாய்ப் பல கீர்த்தனைகள் இயற்றிக்கொண்டே வந்தனர். கலாசாலைச் சிறுவர்களும் உற்சாகமாய்ப் பாடிக்கொண்டு வந்தனர். தற்போது பதினொன்றும் பதிப்பாகப் பிரசுரிக்கப்பட்டு, இதுகாலம் சுமார் இருபதினாயிரம் பிரதிகள் விற்பனையாயிருக்கும் தேவதோத்திரக் கீர்த்தனைகள் என்னும் சிறந்த நூல் முதல் முதல் அச்சிடப்பட்டது நாகப்பட்டணத்தில்தான்.

**தேவதோத்திரக் கீர்த்தனைகளின் ஆதி உற்பவம்.**

தமிழ்ப் பாடல் கலாசாலையில் அபிவிர்த்தியாய் வந்ததைக்கண்டு சந்தோஷமுற்ற சிரேஷ்டர் சுவாமியார் (Fr. de Rochely) தமிழில் ஒரு நாடகமும் அமைக்கும்படி சந்தியாகப்பரை விரும்பினார். சிரேஷ்டர் சொல்லுக்கிணங்கி 'பபியோலா' (Fabiola) என்றொரு நவீன நாடகம் இயற்றி அரங்கேற்றினார்.

**'பங்கிராஸின்' பூர்வோத்தரம்.**

இச்சிறு நாடகந்தான், சிசு வர வர வளர்ந்து யௌவன மேனியுற்றதுபோல், நாளாவட்டத்தில் சிறந்த நவீன சரிதையாக உருவாகி, 'பங்கிராஸ்' எனும் நாமதேயம் பூண்டு, தமிழ் நாட்டில் கெம்பீரமாய் உலாவுகின்றது!

---

உன்னத கடவுளின் நித்தியானந்த சொரூப இலட்சணங்களை உள்ளத்தில் தியானித்துப் பரவசமாகச் செய்யும் மகத்தான இராகங்கள் அனந்தம்! தெய்வ நேச பக்தியால் மானிடன் இருதயத்தை உருகச்செய்யும் இன்னிசைப்பண்கள், சுரங்கள், சுருதிகள் அநந்தம்! வகை வகையாய்ப் பன்னூற்றாண்டுகள் தலைமுறை தலைமுறையாய்த் தமிழ் மக்கள் பாடிவந்திருக்கின்றனர். இவைகளைக் கைவிட்டு பல ஊர்களிலும் கோவில்களிலும் அபரிமிதமாய் அன்னிய இராகங்களில், தமிழ் மொழிகளைப் பிணைத்து அந்தப்பிழையாக்கிப் பாடிவருவதைக் காதால் கேட்பது, தமிழ் மைந்தர் அநேகருக்கு அரிகண்ட வேதனையாம்! அழகிய இரதத்தில் நல்ல ஜாதிக் காளையையும் நல்ல ஜாதிக் குதிரையையும் ஒன்றுபிணைத்தால் என்னமாய்த் தோன்றும்? கழுத்துமட்டும் ஒருவன் சுதேச அங்கவஸ்திர ஆடை அணிந்து, சிரசில் ஐரோப்பிய தொப்பி ஒன்றை மாட்டிக்கொண்டு வெளியேறினால், அது என்னமாயிருக்கும்? செந்தமிழ்ப் பதங்களுக்கு ஒருவாறு இசையக்கூடிய ஐரோப்பிய சுரங்கள் வெகு சொற்பமே! நூற்றைம்பது பாடல்கள் கீர்த்தனைகள் அடங்கிய சந்தியாகப்பர் சுவாமியின் 'தேவதோத்திரக் கீர்த்தனை' எனும் புத்தகத்தில், நான்கு கீர்த்தனைகள்மட்டும் ஐரோப்பிய சுரங்களில் அமைந்திருக்கின்றதை நன்கு கவனிக்கவும்!

நாகபட்டணம் அர்ச். சூசையப்பர் கலாசாலை 1883-ம் ௵ திருச்சினாப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. 1884-ம் ௵ ஜனவரி-௴ 21-ம் ௳ நமது சந்தியாகப்பர் குருப்பட்டம் பெற்றார். மறுநாள் முதற்பூசை செய்து திவ்விய சற்பிரசாதநாதனைக் கரத்தேந்தி தேவ பலி ஒப்புக்கொடுத்தார். தேவ அருளால் சிசுவில் அவர் மனதில் உதித்த பேராவல் நிறைபெறச் சுமார் முப்பது வருடங்கள் சென்றன. குருப்பட்டம் பெற்றபின், சேசுசபை ஏற்பாட்டாகமப்படி சில காலம் திரும்ப நவசந்நியாசிபோலிருந்து, முப்பது நாள் அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருடைய ஞான முயற்சிகளும் பூரணமாய்த் திரும்பச் செய்து 1886-ம் ௵ ஜனவரி-௴ 16-ம் ௳ சேசுசபைக் கடைசி வார்த்தைப்பாடு கொடுத்தார்.

**குருப் பட்டம்.**

**கடைசி வார்த்தைப் பாடு.**

குருப்பட்டம் பெற்றது முதல் 1905-ம் வருஷமட்டும் இருபது வருஷகாலம் விடாத்தொடர்ச்சியாய் திருச்சி கலாசாலையில் F. A. என்ற உயர்தரக்கல்வி மாணவர்களுக்கு ஆங்கிலே ஆசிரியராயிருந்தார். இருபது வருஷ காலம் அயராது வாய்மை திறமையுடன் கல்வி கற்பித்து, யாவராலும் வெகுவாய்க் கொண்டாடப்பட்டு வந்தார். உருவத்திலும் பார்வையிலும் கெம்பீரமாகக் காணப்பட்டபோதிலும் தமது மாணாக்கர்மீதும் தம்மை அண்டினவர்மீதும் உற்சாக அன்பும் பெருந்தன்மையுமுள்ள இதயனும் நம் சந்தியாகப்பர்! சமயா சமயங்களில் அவருக்குக் கோபம் வருவதுண்டு. ஆனால் மின்னல் மின்னி மறைவதுபோல், சடுதியில் தோன்றி சடுதியில் மாறுவது தகைமையுடையோர் கோபத்தின் இயல்பன்றோ! அவருடைய மாணவர்கள் பிரிய தந்தையைச் சூழ்ந்த மக்கள்போலவே, அவரிடம் நெருங்கிப் புழங்கி வணக்கம் குன்றாத அன்பு பாராட்டி வந்தனர். ஆயினும் பாடம் கற்பிப்பதில் நுட்பமும், பாடம் கேட்பதில் கண்டிப்பும் கைவிட்டவரன்று. "அர்ச். சூசையப்பர் கலாசாலையில் வாசித்த இரு தலைமுறை மாணவர்களுக்கு சந்தியாகப்பர் சுவாமியவர்களைப்போல் நன்கறிந்த

**ஆசிரியத் திறமை.**



ஆசிரியர் வேறெவருமில்லை" என, எக்காலமும் இந் நல்லாசிரியன் ஞாபகம் மறவாத அனந்தம் மாணாக்கர்களில் பிராமணர் ஒருவர் எழுதியிருக்கின்றார்.

கலாசாலையில் ஆசிரியராயிருந்த இருபது வருஷகாலமும் ஞாயிற்றுக்கிழமைதோறும் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துக்கு முன் கிறீஸ்துவ மாணாக்கர் அனைவோருக்கும் தேவாலயத்தில் தொடர்ச்சியாய்ப் பிரசங்கம் செய்து வந்தார். மேலும் கலாசாலை விடுமுறை காலங்களில் பற்பல ஊர்களுக்குப்போய் தியானப் பிரசங்கங்களும் வேறு பிரசங்கங்களும் செய்துவருவார். ஜனங்களும் விசாரணைக் குருக்களும் இதற்கென்று அவரை விரும்பி அழைத்து உபசரித்து வந்தனர். அந்தியகாலம்வரை,—மரணத்துக்கு சொற்பகாலத்துக்கு முன் முதலாய்—தேவ மகத்துவத்துக்குகந்த இந்த அப்போஸ்தலத் தொழிலை விட்டுவிடவில்லை. சந்தியாகப்பரின் பிரசங்க வல்லமை மேன்மையைப்பற்றி விரிவாய் இங்கு கூறுதல் அநாவசியம்! அது உலகப் பிரசித்தியன்றோ! அக்காலம் திருச்சி கலாசாலைக் கிறீஸ்துவ உட்பிள்ளைகள் விடுதியில் புதிதாய் ஒரு பையன் வந்து சேர்ந்தால், அவனுக்கு ஆச்சரியமாக் முந்தின பிள்ளைகள் சொல்லும் பல செய்திகளில் முதற் செய்தி ஒன்று,—சந்தியாகப்பரின் அருமையான பிரசங்க வாய்மையே!

**பிரசங்கத் திறமை.**

கலைக்கியானம் கற்பிக்கும் ஆசிரிய அலுவலிலும், தாம் நித்திய கடவுளின் குருப்பிரசாதி என்பதை சந்தியாகப்பர் எக்காலமும் மறந்தவரன்று. தமது மாணவர், கிறீஸ்துவர்களானாலும் மற்றிதர மார்க்கத்தவர்களானாலும், பாண்டித்தியத்தைப் பார்க்கிலும், நற்சிந்தை நல்லொழுக்கத்தையே அதிகமாய்க் கருதி நடக்கவேண்டுமென்ற கவலையும் அபேட்சையும் உள்ளவராயிருந்தார். முன் சொன்ன இந்து மதப் பிராமண மாணாக்கர் பின்வருமாறு எழுதியிருக்கின்றார் :—"குருவாகிய சந்தியாகப்பர் சுவாமி, பரீட்சைகளில் சித்திபெறுவதையன்று, ஒழுக்கம் யோக்கியதையையே தமது மாணவரிடம் அதிமுக்கியமாய் மதித்து ஆசித்து வந்தனர். யாராகிலும் பிசகி நடந்ததாகக் கேள்விப்பட்டால், வெகுவாய் வியசனப்

படுவார். அன்னவனுக்காகக் கடவுளைப் பிரார்த்திப்பார். தனித்துத் தம்மிடம் வரவழைத்து ஓரிடத்தில் அமர்ந்து அன்னவனுக்கு நற்புத்தி சொல்லுவார். யதார்த்தமாகத் தன் குற்றத்தை உணர்ந்து பச்சாத்தாபப்பட்டு, திருந்த நல்மனதுற்றவனைக் காணுமட்டும் புத்தி சொல்லுவதை விட்டுவிடார்.”

**செந்தமிழ் நேயர்.**

இங்கிலீஷ் இலக்கியம் கற்பதிலும் அதைக் கற்றுக் கொடுப்பதிலும் இத்தனை வருஷகாலம் அயரா முயற்சியாயிருந்தபோதிலும், தம் தாய் பாஷையாகிய செந்தமிழ் மீது பாராமுகமாயிருந்தவரன்று; அந்தியகாலமட்டும் செந்தமிழ் நேயராய்ச் சிறந்து விளங்கினார். தமிழ்ப் பாஷையும் இங்கிலீஷ் பாஷையும்,—இவ்விரு பாஷைகளும் அவர் வாய் இதழ்களில் இயல்பாகவே திருத்தமும் தெளிவும் சாதுரியமும் வாய்ந்து துலங்கினவென்னலாம். இவ்விரு பாஷைகளில் எதிலாகிலும், ஒருவரோடு அவர் தனியே சம்பாஷித்தாலும், ஆசிரியர் ஆசனத்தில் அமர்ந்து மாணவருக்குக் கலைக்கியான வியாக்கியானங்கள் வசனித்தாலும், நிறைந்த சபை நடுவே நிமிர்ந்து நின்று உபந்நியாசமோ பிரசங்கமோ செய்தாலும், எச்சமயத்திலும் அவர் வாய்மொழியைக் கேட்பது இன்பமாகவேயிருக்கும். தமிழ் நூல்களில், திருவள்ளுவர் குறள், வீரமாமுனிவர் தேம்பாவணி இவ்விரண்டையும் விசேஷப் பிரீதியுடன் ஆராய்ச்சிசெய்து வந்திருந்தார். தமிழ்மொழி நுண்ணறிவும் தமிழ் நூல் ஆராய்ச்சியும் இங்கிலீஷ் இலக்கிய நூல்களை சாதுரியத்திறமையுடன் கற்றுக்கொடுப்பதற்கு அநுகூலமாயிருந்தன. சமயத்துக்குச் சமயம் இங்கிலீஷ் காவியங்களில் குறுக்கிடும் அரும்பொருள் வாக்கியங்களுக்கு இணையாக, சம அர்த்தம் தரும் தமிழ்க்காவிய வாக்கியங்களை எடுத்துக்கூறி வியாக்கியானிப்பார்; ஆங்கிலேய மொழிகளின் சுய அர்த்தம் விளங்க, சரியான தமிழ்மொழி இன்னதென்று எடுத்துரைப்பார். இவ்வாறு பாடம் கற்பித்தல், அன்னிய பாஷையில் கல்வி பயிலும் விதிவசித்த தமிழ்நாட்டு மாணவர்க்கு பேருதவியும் பேரானந்தமுமாயிருந்தது. சுயமான சுதேச இராகங்களில் திருத்தமாய்ப் பாடுவதைக் கேட்பது எப்பொழுதும் அவருக்கு பரமானந்தமே!



வெகுநேரம் பாடம் கற்பித்துக் களைப்பாயிருக்கும் வேளைகளில் சற்றுநேரம் பாடத்தை நிறுத்தி, மாணாக்கருள் நன்றாய்ப் பாடத் தெரிந்தவர்களைப் பார்த்து: “இலட்சுமணா, தோடி இராகத்தில் ஒரு பாட்டுப்பாடு; இராமகிருஷ்ணா, சங்கராபரணம் ஒன்று பாடு” என்று பாடச்சொல்லி மனரம்மியமாய்க் கேட்டுக்கொண்டிருப்பார்.

**செந்தமிழ்த் தேர்ச்சியின் கண்கண்ட பலன்.**

பாலியமுதல் உற்சாக வாஞ்சையுடன் சந்தியாகப்பர் அபிவிர்த்தி செய்துவந்த செந்தமிழ்த் தேர்ச்சி, அனந்தம் ஆத்துமாக்களுக்கு ஞான அறிவும் நற்சிந்தனையும் தெய்வ பக்தியும் புகட்டுவதற்கு எவ்வளவு பிரயோசனப்பட்டு வந்ததென்பதற்கு, அந்தியகாலம் வரை அயராது அவர் செய்துவந்த எண்ணிறந்த பிரசங்கங்களும் புத்தி போதகங்களும், அவர் கையால் எழுதி அச்சுப் பதிப்பிக்கப்பட்ட பற்பலப் பிரசுரங்களுமே கண்கண்ட திருஷ்டாந்தம். குருப்பட்டம் பெற்றபின் அநேகவருஷம் மாதாமாதம் திரு இருதயத் தூதன் பொதுக்கருத்து எழுதி வந்தவர் நமது சந்தியாகப்பரே. மேலும், அமலோற்பவ மகிமை, செப அப்போஸ்தல சபைக் கும்மி, திரு இருதய மந்திரமாலை,—இதுபோன்ற சிறிய புத்தகங்கள் இலிகிதங்கள் சமயாசமயங்களில் எழுதிவந்தார். ஆயினும் தமிழ் நாடெங்கும் சந்தியாகப்பர் பெயரைப் பிரஸ்தாபிக்கும் நூல்கள், முன்னமே சொல்லப்பட்ட **தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனை, பங்கிராஸ், மன்ரேசா** என்ற பிரபந்தங்களே!

**கலாசாலையை விட்டு நீங்கல்.**

முன் சொன்னபடி நெடுங்காலம் கலாசாலையில் உழைத்த பின், 1906-ம் ௵ கலாசாலையைவிட்டு, பெரியவர்கள் உத்திரவுப்படியே, பங்குகளில் ஆத்துமாக்களுக்காக உழைக்கும் ஜீவியத்துக்குப் புறப்பட்டார். சந்தியாகப்பர் புறப்பட்டுப் போகிறாரென்ற செய்தி தெரிந்ததும், பிரமிப்பை உண்டாக்கும் அதிசய அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டதுபோல், பாலர் வகுப்பு ஆறு ஏழு வயசுச் சிறுவர்கள்முதல், உயர்வகுப்பு இருபது வயசுப்

பிள்ளைகளும் உபாத்திமார்களும், கலாசாலையெங்கும் கலகலவென்று: "சந்தியாகப்பர் சுவாமியார் காலேஜை விட்டுப் போகிறாராமே!—போகிறாராமே!" என்ற பேச்சாகவே திகைத்து நின்றனர். அவருக்கு வந்தனோபசாரம் சொல்லி வழியனுப்ப மனம் கனிந்து திரண்டுகூடிய நிறைந்த சபையில் ஒரு பாலியன் எழுந்து நின்று:

சந்தியாகப்பராம் நம்
சிந்தைக்குகந்த பிதா
தனையரைவிட்டுப் போறாரே!
அந்தோ! போறாரே!

என்று மனதுருகும் ஏகாந்தத்தொனியில் பாடினது இன்றும் நமது செவியில் சப்தித்தாற்போலிருக்கின்றது.

தேவதாயின் உத்தம பக்தன்.

கலாசாலையைவிட்டு நீங்கினபின், சிலகாலம் தூத்துக்குடியிலும், மணப்பாட்டிலும், கடைசியாய்த் திண்டுக்கல்லிலும் உதவிப்பங்கு சுவாமியாராயிருந்தனர். அமலோற்பவ நாயகியின்மேல் சிசுமுதல், தாயை நாடித்தேடிய பிள்ளைபோல், பாசநேச பக்தியுடையவராய் விளங்கினார் நமது சந்தியாகப்பர்! "அமலோற்பவ மகிமை" என்ற சிறு புத்தகத்தில் மாத்திரமன்று, ஒவ்வொரு பிரசங்கத்திலும், எழுதிய ஒவ்வொரு விஷயத்திலும் தேவதாயின் திருநாமத்தை ஓயாமல் வாழ்த்தி ஸ்துதித்து மன்றாடுதல் அவருக்கு இயல்பாயிருந்தது.

"அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழார்வலர்
புன்கணீர் பூசறரும்."

அஃதாவது: "அகத்தில் அன்பிருந்தால், அதனைப் பிறர் அறியா வண்ணம் அடைத்துவைக்கத் தாழ்ப்பாளும் உண்டோ? அன்புடையோர் கண்கள் பொழியும் புல்லிய கண்ணீர்த் துளிகளே அவர்கள் உள் நிற்கும் அன்பினைப் பிறர் அறியத் தூவுமன்றோ!" என்றுரைத்தார் திருவள்ளுவர்.—இதற்கிசைய:—



"மீனார்முடிசூழும் மேன்மைபொலி மாதரசி
பானார் திருக்கன்னிப் பாதமலர்—நானே
நெஞ்சணிந்து செஞ்சொலுடன் நின்புகழைப் பாடவே
தஞ்சமெனக்கின் றுதவி தா," *

என்று ஆரம்பவெண்பா கூறி, தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனையில் தேவதாயாரை ஸ்துதித்து சந்தியாகப்பர் பாடியிருக்கும் அறுபத்தெட்டு வெவ்வேறு பாடல்களே தேவதாயின்மீது சதா அவர் உள் நின்ற அன்பின் உருக்கப்பெருக்கத்தை உலகறியப் பிரஸ்தாபிக்கின்றன.

கண் வியாதி.

வயோதிக காலத்தில் கண்ணில் பூப்படர்ந்து, கண் பார்வை பெரும்பாலும் இழந்துபோனவராகக் காணப்பட்டார். ஆயுள்காலமெல்லாம் வாசிப்பதும் எழுதுவதும் போதிப்பதுமே பிரதான அலுவலாய்க்கொண்ட நமது சந்தியாகப்பருக்கு இவ்விபத்து எவ்வளவு பெருந்துயராய் இருந்திருக்கவேண்டுமென்று உத்தேசித்துக் கொள்ளலாம். சென்னபட்டணம்போய் சிகிச்சை செய்துகொண்டதில், பூரண சௌக்கியம் பெற்றுக் கண் பார்வை திரும்ப அடைந்தது தேவதாயின் ஒரு விசேஷ கிருபையினாலென்றே அவர் ஸ்திரமாய் மனதில் எண்ணியிருந்தார்.

திண்டுக்கல் லூர்துகெபி.

இவ்வுபகாரத்துக்கு நன்றியறிதல் அடையாளமாக, திண்டுக்கல்லில் மகத்தான லூர்துமாதாக் கெபி ஒன்று அமைத்து, அமலோற்பவநாயகியின் வடிவழகான உயர்ந்த சுரூபம் ஒன்றை அதில் சிங்காசனமேற்றி முடிசூட்டிவைக்கவேண்டுமென்ற பேராவல் வயோதிகர் மனதைத் தூண்ட, அதற்காக உற்சாக ஊக்கமுடன் பலநாள் பிரயத்தனப்பட்டார். நாலா பக்கமும், சாதுரிய வாஞ்சையுடன், தாம் கருதிய சுபகாரியத்தை அறிவித்துப் பொருளுதவிகேட்டார். அதிசீக்கிரம் மதிப்பான ஒரு தொகை வசூலாயிற்று. அவரிடம் முன் மாணுக்கராயிருந்த இந்துக்களுக்குள்ளே முதலாய் பலர் அவர் விருப்பத்துக்கிசைந்து சந்தோஷமாக நன்கொடை ஈந்தனர். சந்தியாகப்பர் கருத்துப்படியே, மகத்தான லூர்துகெபி ஒன்று திண்டுக்கல்லில் முடிவுபெற்று, வடிவழகான உயர்ந்த

* தேவஸ்தோத்திரக்கீர்த்தனை, 11-ம் பதிப்பு, 24-ம் பக்கம்.

சுரூபமும் அதில் ஸ்தாபிக்கப்பட்டு 1925-ம் வருஷம், ஜூன்-மீ பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டையாகும்போது, கிறீஸ்துவர்களும் இந்துக்களும் மகம்மதியரும் அடர்ந்து கூடிய ஜனக்கும்பலுக்கு அருமையான ஒரு பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கத்தில், லூர்து நாயகியின் திருச் சுரூபத்தைக் கண்ணோக்கிக் கரங்களை விரித்து, கெபிக்குப் பொருளுதவிபுரிந்த இந்து மதஸ்தரான தமது நண்பர்களுக்கு சத்திய திருமறையின் அருட்பிரகாசம் பெற்றுத் தந்தருளும்படி மனுக்குலத்தின் இராக்கினியும் தாயுமாகிய அந்தப் பரம நாயகியை உரத்த சத்தமாய் மன்றாடி அவர் செய்த ஜெபம், இருதயம் பரதவிக்க அதற்கிசைந்து வீணை ஒலித்தாற்போல், கேட்டோர் மனதை உருகச்செய்ததாம்!

**லூர்துகெபியில் பிரசங்கம்.**

உடலில் உயிருள்ளளவும் சந்தியாகப்பர் சேசுசபையை எவ்வளவு வாஞ்சையாய் நேசித்துவந்தாரென்பது அவரை அறிந்த யாவருக்கும் நன்கு தெரிந்த விஷயமே! கடும் புசல்போல், அடுத்தடுத்து எழும்பி வந்த துன்ப துரிதம் எதிரிடைகளிலெல்லாம் தன்னை ஆதரித்து அரவணைத்து சேசுசபையில் கொண்டுபோய்ச் சேர்த்ததும், அத்தனை காலம் சேசுசபையில் தன்னைப் பாதுகாத்து வந்ததும் அன்புள்ள தேவதாய் தானென்று அவர் இருதயத்தில் ஸ்திரமாய்ப் பதிந்திருந்தது. 1918-ம் வருஷம், அவர் சேசுசபையில் உட்பட்ட ஐம்பதாம் வருஷத் தங்க ஜூபிலி கொண்டாடப்பட்டது. இந்த ஜூபிலியின் ஞாபகார்த்தமாக அவர் எழுதிய, 'வேதோபதேசக்கும்மி' என்ற நூலின் முடிவில்: "தேவதாயாருக்கு ஒப்புக்கொடுத்த பாதகாணிக்கை" என்று ஆசிரிய விருத்தம் ஒன்று பாடியிருக்கின்றார். தேவதாயின்மீது அவர் எந்நாளும் வைத்திருந்த நேச பக்தி அதில் வெகு துலக்கமாய் விளங்குவதால் அதனை இங்கு எடுத்துத் தருகின்றோம்.

**சேசுசபை நேசன்.**

"அதி உத்தம தேவனுக் கன்னையாம் வரம்பெற்ற
அற்புத கன்னித்தாயே!
அற்பமும் பேறில்லா என்னை நீ பிள்ளையாய்
அன்புடன் வளர்த்ததேனோ?



நிதி செல்வம் தந்தை தாய் பந்துமுதல் யாவையும்
நீக்க நீ கிர்பை செய்தாய்!
நின்மகன் சேசுவின் பேர்கொண்ட சபையிலே
நீ என்னைக் கூட்டிச் சேர்த்தாய்!
இதிலே நான் ஐம்பது வருஷங்கள் வாழ்ந்திட
எனக்குயிரும் பலமும் தந்தாய்!
என்றும் உனைப்பாடினேன் எங்கும் உனை வாழ்த்தினேன்
இன்னமும் புகழ்ந்து சொல்வேன்
மதியில்லாப் பேதை எனும் நான் வைக்கும் காணிக்கை
மாதா நீ ஏற்று அருள்வாய்!
மரணம் வந்திடுங் காலம் நீ என்னைத் தாங்க உன்
மகனும் எனைத் தாங்குவாரே!"

**கடைசி மூன்று வருஷம்.**

மரணமடைவதற்கு மூன்று வருஷத்துக்கு முன்னமே திண்டுக்கல்லை விட்டு திருச்சியில் அர்ச். ஆரோக்கியமாதாக் கோவில் அறைவீட்டில் வந்து வசித்தார். வரவர உடல் மெலிந்து நடை தளர்ந்தவரானார். ஆயினும் கடைசிமட்டும், சதா முகமலர்ச்சியும் மனோற்சாகமும் உடையவராகவேயிருந்தார். ஓயாமல் ஜெபிப்பதும், வாசிப்பதும் எழுதுவதும், சமயத்துக்குச் சமயம் வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று தியானப் பிரசங்கங்கள் செய்வதுமே இம்மூன்று வருஷகாலமும் அவருடைய ஜீவியமாயிருந்தது. 1925-ம் வருஷம் இறுதி, சுமார் அக்டோபர் மாதம் முதல் பலவீனம் ஓயாமல் அதிகரித்துவர, வருஷம் முடிவதற்குள்ளாகப் படுத்த படுக்கையானார். திவ்விய பூசை செய்யக்கூடவில்லை. பிரதிதினமும் திவ்விய சற்பிரசாதப் பலி ஒப்புக்கொடுத்து வருவதில், அத்தியந்த ஆவலும் ஏக்க நோக்கமுமுடைய சந்தியாகப்பர் இருதயத்துக்கு, இந்தக் குறை, அந்தோ! பெருந்துயராயிருந்தது! ஆயினும் அநுதினம் தமது அறையில் திவ்விய சற்பிரசாதம் அருந்திவருதல் அவருக்கு ஒரு ஆறுதலாயிருந்தது. விருத்தாப்பிய வியாதியேயன்றி, வேறு விசேஷித்த வியாதி ஒன்றும்

**கடைசி மூன்று மாதம்.**

அவரிடம் காணப்படவில்லை. இந்நாட்களில் சேசுசபையில் அவருடைய சகோதரர்களான குருக்களும் மற்றோரும், இதர மனுஷர்களில் அவருடைய நண்பர்கள் பலரும் அடிக்கடி அவரை சந்தித்து வந்தனர். யாவரிடமும் முகமலர்ச்சியாய்: "இனியவை கூறல்" என்ற முதுமொழிப்படி இனிது வார்த்தையாடி வந்தார். மிக வந். ஆண்டவரவர்கள் தினசரி பிற்பகல் சுமார் நாலாம் மணி வேளை அவரைப் போய்க் காண்பார். இந்நேரத்தை வயோதிகர் வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருப்பார். ஆண்டவர் தன்னிடம் வந்து சம்பாஷித்துப்போவது பரிமளம் வீசும் பூச்செண்டுபோலிருக்கின்றதென்பார். மரண பயங்கரம் அவர் மனதை அணுகவில்லை.

**மரண பயங்கரமின்மை.**

"உமது விசுவாசிகளுக்கு, ஆண்டவரே, ஜீவியம் மாற்றப்படுகின்றது, மாய்க்கப்படுவதில்லை; இப்பூலோக வாசத்தின் இல்லிடம் தகர்ந்து, பரலோகத்தில் நித்திய வாசஸ்தலம் சேருகின்றோம்" * என்று மரித்த விசுவாசிகளுக்காக நியமிக்கப்பட்ட திவ்விய பூசையின் உன்னத முகவுரையில் அடிக்கடி வாசித்துத் தியானித்துவந்த நமது சந்தியாகப்பர், மரண பயங்கரத்தையல்ல, திரியேக சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கும் நித்தியானந்த மோக்ஷ பதவியையே இருதயத்தில் சிந்தித்து, பூரண தேவ விசுவாசம், பூரண தேவ நம்பிக்கையுடன், கலக்கம் கிலேசமின்றி அமைதியாய் மரணத்துக்கு எதிர் பார்த்திருந்தார்;—தமது ஆத்துமா உடலைவிட்டு நீங்கத் தேவதிருவுளம் குறித்த நேரம் எதுவோ, அது தமக்குப் பாக்கியமான நேரமென்றெண்ணியிருந்தார். இது நிற்க:—

**மரணத்தை எதிர்பார்த்த மன அமைதி.**

டிசம்பர்-மீ 16-ம் உ, திடீரென்று ஜன்னி கண்டு மூர்ச்சையானார். மூர்ச்சை தெளிந்ததும், இனிமேல் எப்படியெல்லாமிருக்குமோவென்று கவலையுற்று, அதிசிரேஷ்டர் வயோதிகரிடம் அணுகி: "அவஸ்தைப்பூசுதல் பெற்றுக்கொள்ளுகிறீரா" வென்று கேட்டார். "அதற்குத்தானே ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்

* "Tuis enim fidelibus, Domine, Vita mutatur, non tollitur: et, dissoluta hujus incolatus domo, æterna in cælis habitatio comparatur."



கிறேன்" என்றார் நமது சந்தியாகப்பர்,—சற்றும் முகம் மாறாமல் மனம் பதறாமல்! நல்லறிவுடன் நற்றெளிவுடன், ஆத்தும குருவிடம் பாவசங்கீர்த்தனம் செய்து, சூழ்ந்து நின்ற சேசுசபைத் தம் சகோதரர்களிடம் தமது பிழைகளுக்கு மன்னிப்புக் கேட்டு, அநித்தியம் நீங்கி நித்தியத்துக்குப் பயணமாயிருக்கும் மானிடன் ஆத்துமாவுக்கு வழித்துணை அமுதாகிய திவ்விய சற்பிரசாதமும் உட்கொண்டு, அதிசிரேஷ்டர் கையால் அவஸ்தைப்பூசுதலும் பெற்றுக்கொண்டார். அவஸ்தைப்பூசுதல் நிறைவேறினதும் சுற்றி நின்றவர்களைப்பார்த்து; "ஆ! சேசு சபையில் மரிப்பது எவ்வளவு பாக்கியானந்த அதிர்ஷ்டம்" என்று இருதயத்தில் ஞானானந்தம் பொங்கினவராய்ப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார். அவரிருந்த ஸ்திதியில் அவ்வாறு மன எழுச்சியுடன் நெடுநேரம் பேசினால் ஆபத்தென்றஞ்சி, அதிசிரேஷ்டர் புன்சிரிப்புடன்: "சுவாமி, வெகு பலவீனமாயிருக்கிறீர்கள், நெடுநேரம் பேசுதல் ஆபத்தாயிருக்கலாமே! உங்கள் மனதிலுள்ள நல்லாவலை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுங்கள்" என்றார். சிரேஷ்டர்சொல் காதில் விழுந்ததும், முகமலர்ச்சியாய் மௌனமாயிருந்துவிட்டார்.

**அவஸ்தைப் பூசுதல்.**

அவஸ்தைப்பூசுதல் பெற்றபின், அவர் இன்னும் உயிரோடிருந்த முப்பத்தாறு நாளும் பரலோக சிந்தனையே மிகுந்தவராயிருந்தார். "ஆ! சேசுசபையில் மரிப்பது எவ்வளவு பாக்கியமான அதிர்ஷ்டம்!" என்று தம்மைப் பார்க்க வருகிறவர்களிடம் சலியாது அடிக்கடி சொல்லிவந்தார்.

**கடைசி 36 நாள்.**

"சிலுவையடியினில் நின்றுயிர்வாடிடும்
தேவமரி அருள்புரிவாய்"

என்று மனதுருக அவர் பாடிவந்தபடியே, முதல் முதல் அவர் சிந்தையில் நின்று, அவர் மனதைத் தேற்றிவந்தது சிலுவையில் பாடுபட்ட நாதன். பாடுபட்ட சுரூபம் சதா தன் கண்முன் இருக்க வேண்டுமென்று விரும்பினார்; அடிக்கடி கையில் எடுத்து வைத்துக்கொண்டிருப்பார், அல்லது கண்காணப் பக்கத்தில் வைத்துக்

கொள்ளுவார். சிலுவையில் பாடுபட்ட நாதனை நோக்கிய கண்ணாலேயே சிலுவையடியில் ஓர்நாள் உயிர் வாடி நின்ற தேவ தாயாரையும் நோக்கி, மனதில் தியானித்துப் பிரார்த்தித்து வந்தார்.

“அந்திய காலங்கிட்டி அடுத்துயிர் பிரியும்வேளை *
சிந்தையில்மெலிந்து கண்கள் தெளிவிலாத்தியங்கும்போதும் *
வந்துநீ அருகில்நின்று வலக்கையில் என்னைத்தாங்கிச்
சொந்த உன் மகன்முன்பாகச் சேர்த்திடாய் தேவதாயே!”

என்று அநேக வருஷமாய் அவர் தேவாரம்பாடி மன்றாடி வந்த தேவதாய் மரணம் அடுத்து நின்ற இவ்வேளையில் தமது தாசனைக் கைவிடுவாளோ? இல்லை! இல்லை! சதா தமது தாசன் மனதைத் தேற்றியே வந்தாள் அந்த தேவதாய்! அவஸ்தையாய்ப் படுத்திருந்தவர் கண்களுக்கு சில சமயங்களில் ஏதோ ஆட்கள் தன்முன் வந்து நின்றாற்போல் தோன்றும். இதுவெல்லாம் தேக பலவீனத்தால் நிகழும் வீண் தோற்றங்களென்று அவரே சொல்லிக்கொண்டு நகைப்பார். ஓர் நாள் பரிசுத்த கன்னிகை சம்மனசுக்கள் புடைசூழ அருகில் வந்து நிற்பதைத் தான் கண்டதுபோல் அவருக்குத் தோன்றினது. தம்மைப் பார்க்க வருகிறவர்களிடம் இதைப்பற்றிப் பேசும்போது, சிரித்துக் கொண்டு, இதுவும் ஒரு வெறுந்தோற்றமே! ஆயினும் பரவாயில்லை; எப்படியிருந்தபோதிலும், என் மனதுக்கு அது வெகு தேற்றரவாயிருந்ததென்பார். காலஞ்சென்ற எனது நண்பர்கள் உபகாரிகளை அதிசீக்கிரம் மோக்ஷத்தில் சந்திக்கப்போகிறேனென்று மனம் உவந்து சொல்லிக்கொண்டுவருவார். இவ்வாறு

* * பல வருஷங்களுக்குமுன் தேவஸ்தோத்திரக் கீர்த்தனை முந்தின பதிப்புப் பிரதிகளில் வாசித்த ஞாபகப்படி மேற்கூறிய நான்கு வரிகளையும் எழுதினோம். சந்தியாகப்பர் மரணத்துக்கு சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் திரும்ப அச்சிடப்பட்ட 11-ம் பதிப்புப் பிரதியில் முதல் இரண்டு வரிகளும் சற்றே மாற்றமாய்க் காணப்படுகின்றன. அஃதாவது :—

“அந்திய காலங்கிட்டி அவஸ்தையாய்க் கிடக்கும்போதும்
சிந்தையுங் கலங்கிக் கண்கள் தெளிவில்லாதிருக்கும்போதும்
.....மற்றதும். (11-ம் பதிப்பு, 25-ம் பக்கம்.)



**பாக்கியமான மரணம்.**

அவஸ்தை பெற்ற வயோதிகரின் மீதி நாட்கள் ஆற்றல் அமைதியாய்க் கழிந்து வந்தன. எண்ணெய் வற்றிப் போக, மின்னிமின்னி மங்கலாய் எரிந்துகொண்டிருந்த தீபம் திடீரென்றவிந்ததுபோல், 1926-ம் ௵, ஜனவரி-௴ 22-ம் ௳ முற்பகல் சுமார் 11-ம் மணிநேரம், இகலோக அநித்திய வாழ்வு அவருக்கு அஸ்தமித்து, பரலோக நித்திய ஜீவியம் உதயமாயிற்று. அது சமயம் ஆத்திரமாய் விரைந்து வந்து சுற்றிநின்ற ஆண்டவரவர்கள் சுவாமிமார் முதலியவர்களில் எவராகிலும் திட்டமாய் எந்நேரம் அவருடைய ஆத்துமா பிரிந்ததென்று சொல்ல முடியவில்லை. அவ்வளவு மெல்லென அனக்கமின்றி ஆவி உடலைவிட்டு நீங்கிற்று!

சங். சந்தியாகப்பர் சுவாமியவர்களின் அந்திய கால விசேஷங்களைக் கவனமாய் வாசித்த நண்பனே, சற்றே வாசகத்தை நிறுத்தி, மனதில் தியானிப்பாயாக! சாவின் பயங்கரம் எவரைத் தீண்டும்? எவரைத்தீண்டும் எவரைத்தீண்டாதென்று நம் சந்தியாகப்பரே தமது மன்ரேசா புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். அஃதாவது :—

“சாவின்பேரில் அநுதினம் தியானிக்கிறவன் புத்திமான். சாவின் யோசனையை எந்தச் சமயத்திலும் கேட்டு நடக்கிறவன் பாக்கியவான். * * * * சகோதரரே! அந்தக் கடைசிநாள், நம்மெல்லோருக்கும் தப்பாமல் வரும். அந்த நாள் வரும்போது நமக்கு நல்ல மரணம் வரும்படியாய் இப்போது பூரண சௌக்கியமாயிருக்கும்போதே நல்ல கிறீஸ்துவர்களாய் ஜீவிக்கவேண்டிய முயற்சி எல்லாஞ் செய்வது புத்திமான் கடமை. மனிதனுடைய ஜீவியநாள் எப்படியோ அப்படியே அவனுடைய மரண நாளும் இருக்கும் * * * அந்த அந்திய நாள் நமக்குப் பாக்கிய நாளாய் இருக்கும்படியாக தேவதாயார்பேரில் பத்தியும் சிநேகமும் வைத்து பிரியதத்தமந்திரத்தில் கேட்கும் மன்றாட்டைப் பத்தியோடும் கருத்தோடும் அநுதினம் சொல்லவேண்டும். * * * *”

“சகோதரரே! பாவஞ்செய்யாமல் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வீர்களேயாகில், நீங்களும் இஷ்டப்பிரசாதத்தோடு

சந்தோஷமாய் சாவீர்கள். அப்போது சாவின் பயங்கரம் உங்களுக்குத் தோன்றாது. இதுதான் சகல வரங்களிலும் மேலான வரம். இந்தப் பாக்கியமான சாவுக்காக சர்வேசுரனை மன்றாட வேண்டும்."

(மன்ரேசா: 3-ம் நாள்: 2-ம், 3-ம் தியானங்கள், 155-ம், 172-ம் பக்கங்கள்).

சந்தியாகப்பர் அயராது போதித்துத் தாமும் அநுஷ்டித்து வந்த மேற்சொன்ன நற்போதகம் யாவர் மனதிலும் ஸ்திரமாய்ப் பதிந்திருப்பதாக!

கலைக்கியானத்திறமை, கவித்திறமை, பிரசங்கத்திறமை,—இவைகளையெல்லாம்விட, அவரிடம் எக்காலமும் பளிங்குபோல் துலங்கிய உத்தம தேவ விசுவாசம், தேவ நம்பிக்கை, தெய்வ பக்தி, தெய்வ நேசம், புனித ஒழுக்கம், தேவ ஊழியத்தில் சோர்வில்லா சுறுசுறுப்பு, மாமரிதாய்மேல் மாபக்தி,—இவைகளே காலஞ்சென்ற நம் சந்தியாகப்பருக்குச் சிறந்த கிரீடமாம்! "நல்ல யுத்தம் செய்தேன், என் அயனத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்தேன். கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. இதை நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அந்த மகா நாளில் எனக்குக் கொடுப்பார். எனக்கு மாத்திரமல்ல, அவருடைய வருகையை ஆசிக்கிற சகலருக்கும் அவர் அதைக் கொடுப்பார்"* என்ற அப்போஸ்தலர் வாக்கியம், அவர் கூறியபடியே நல்ல கிறீஸ்துவனாய் ஜீவித்த எவனுக்கும் செல்லுமென்றால், நம் சந்தியாகப்பருக்கு ஏன் செல்லாது?

சென்ற வருஷம் நம்மைவிட்டுப் பிரிந்துபோன சந்தியாகப்ப சுவாமியவர்களைப் பல வருஷகாலம் நாம் அறிந்தமட்டுக்கும், அவர், கத்தோலிக்குத் திருமறைத் தேவ விசுவாசத்தைத் தம் உயிரிலும் அருமையாகப் பேணி வந்த உத்தம விசுவாசி, மனத்தின் கண் மாசு என்பதைப் பற்றறப் பகைத்த புனிதன், கோணல் கூனலில்லா நேர்சிந்தையில் நேரே ஒழுகும் நேர்மை வாய்ந்த சுசீலன்,—கபடில்லா யதார்த்தவாக்கன், தெய்வ பக்தியில்

* 2-ம் திமோத். 4-ம் அதி. 7-8-ம் வசனங்கள்.



முதிர்ந்த மகாத்மா, மாமரி தாய்க்குகந்த மைந்தன், எனத் திகையாது கூறுவோம்.

இவர் போன்ற சற்குருக்கள் அனந்தம்பேர் தமிழ் மக்களுள் உருவாகும்படி தேவ அருட் கிருபை இத்தமிழ் நாட்டுக்குக் கிடைப்பதாக!

---

## அர்ச். அலங்காரமாதாவின் தாசர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கும்பகோணம் மேற்றிராசனத்தில் வரதராஜம்பேட்டை என்னும் ஓர் பங்கு உண்டு. அவ்விடத்தில் ஏறக்குறைய ஐயாயிரங் கிறீஸ்துவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காக 1909-ம் வருஷம் அர்ச். அலங்காரமாதாவின் பாதுகாவலில் ஓர் ஆலயங் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டது. வருஷம் பதினேழுக்கு மேலாகியும் கோயில் கட்டி முடிந்தபாடில்லை. கிராமவாசிகளோ மகா ஏழைகள். இதுபரியந்தம் ஐரோப்பிய தர்மத்தை எதிர்பார்த்திருந்த பங்குக் கிறீஸ்துவர்கள் தங்கள் தரித்திர ஸ்திதியைச் சட்டைபண்ணாமல் தங்களாலான உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். இருந்தபோதிலும் குடிகளின் உதவியைக்கொண்டு ஆலயங் கட்டிமுடிப்பது அசாத்தியம்.

ஆகையால், இதை வாசிக்கும் நேயர்களே, இவ்வூர்க் கிறீஸ்துவர்கள்மீது இரக்கம் வைத்து உதவி செய்யுங்கள். அவர்கள் உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் அர்ச். அலங்காரநாயகியை அன்றாடம் மன்றாடுவார்கள். பங்குக் குருவும் தன் அநுதின பூசையில் உங்களை நினைவுகூர்வார். உங்கள் தர்மம் எவ்வளவு சொற்பமாயினும் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள். நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

சங். இரத்தினநாதர்,
வரதரார்ஜம்பேட்டை
*via* கூடலூர் (தென் ஆற்காடு.)

மேற்கண்ட விண்ணப்பம் கும்பகோணம் மேற்றிராசன அதிசிரேஷ்டரும் விசாரணைக்காரருமாகிய மிக. சங். சொலிந்தே சுவாமியாரவர்களின் அங்கீகாரம் பெற்றது.

# இந்திய கத்தோலிக் சத்தியாபிமான சபை.

## சபையின் உத்தியோகஸ்தர்கள்.

**பிரசிடேன்ட் :**

திருச்சி மேற்றிராணியார், மகா வந். A. பெசாந்தியர் ஆண்டவர், S.J.

**டைரேக்டர் :**

Rev. Fr. A. I. ஆனந்தநாதர், S.J., கன்றேன்மென்ற், திருச்சி.

**காரியதரிசி :**

Mr. A. ஜெகநாத பிள்ளை, கன்றேன்மென்ற், திருச்சி.

## சந்தா விபரம்.

1. சபையில் சேரும் சாதாரண அங்கத்தினர் செலுத்தவேண்டிய சந்தாவானது வருடம் ஒன்றுக்கு உள்நாடுகளாகிய இந்தியா, சிலோன் பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 1-0-0-ம், வெளிநாடுகளாகிய பினாங்கு சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ரூ. 1-6-0.

2. ஆயுள் அங்கத்தினராகிறதற்கு மொத்தமாய்ச் செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 15. இவர்கள் வேறு சந்தா கொடுக்காமலே தங்கள் ஆயுள்காலபரியந்தம் சபையினின்று வெளிவரும் "கத்தோலிக்கு குடும்ப போதினி" என்னும் மாதப் பத்திரிகையுடன் இ... காணும் துண்டு பிரசுரங்களையும் பெற்றுக்கொள்ளுவார்கள்.

3, பதினைந்துக்கு மேற்பட்டு ரூ. 50 வரையில் மொத்தமாய்க் கொடுப்பவர்கள் சபையின் பரிபாலகராவர். ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அளிப்பவர்கள் சபை ஸ்தாபகர் என்றழைக்கப்படுவார்கள்.

இவர்களும் ஆயுள் அங்கத்தினரைப்போலவே தங்கள் ஆயுள்காலம் வரையில் வேறு சந்தா செலுத்தாமல் சபையினின்று வெளிவரும் பிரசுரங்களைப் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவர்களாவார்கள்.

குறிப்பு :—சந்தா நேயர்களுக்கு மாதாந்தரம் அனுப்பப்படும பிர[illegible]கள் :—

1. கத்தோலிக்கு குடும்ப போதினி யென்னும் 16 பக்கத்துக்குக் குறையாத மாத பத்திரிகை.
2. 16 பக்[illegible] துண்டு புத்தகம்.
3. 2 [illegible]க்கங்களுள்ள தனி இதழ்கள் (சமயம்போல்.) தனி [illegible] அது 2.

85940

A. JEGANATHAM,
*Hon. Secretary, I. C. T. S.,*
Cantt., **Trichinopoly.**